சீரமைப்பு செய்வதற்கு சுற்றுலாத் துறை சார்பாக நிதி ஒதுக்கீடு செய்ய வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

259—

பேருந்து பணிமனை

*5478—திரு. பொன். ராஜா:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனையை மாநகரப் போக்குவரத்துக் கழக பணிமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் சார்பில் பொன்னேரி பணிமனை 5.46 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது. பொன்னேரி பணிமனையில் இயக்கப்படுகின்ற 56 பேருந்துகளில் 38 பேருந்துகள் மாநகரப் போக்குவரத்துக் கழக எல்லைக்குள் இயக்கப்படுவதால் அப்பேருந்துகளை மாநகரப் போக்குவரத்துக் கழகம் எடுத்து இயக்கும் வகையில் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒன்றும், பொன்னேரியிலிருந்து கிராமங்களுக்குச் செல்லும் பேருந்துகளைப் பராமரிக்க அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் சார்பில் ஒரு பணிமனையும் செயல்பட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

2012 மே 14]

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனை படைப்பதில் சரித்திரம் படைத்த தாய், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு அம்மா அரசுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.*

திரு. ஆர். சின்னசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, எனது சட்டமன்றத் தொகுதியில் சுங்கம்–1, சுங்கம்–2 என்ற இரண்டு பணிமனைகள் இருக்கின்றன. அங்கே அதிகமாகப் பேருந்துகள் வந்து நிற்கிற காரணத்தாலே இடையூறு ஏற்படுகிறது. ஒண்டிப்புதூர் பணிமனை–1 என்று ஒரு பணிமனையும் இருக்கின்றது. அங்கே இட வசதியும் இருக்கின்றது. ஆகவே, சுங்கம்–1, சுங்கம்–2 ஆகிய பணிமனைகளை மூன்றாகப் பிரித்து ஒண்டிப்புதூரில் புதிதாக ஒரு பணிமனையைக் கட்டிக் கொடுத்தால் பேருந்துகளை தாராளமாக நிறுத்தி வைக்க முடியும். எனவே, அங்கு ஒரு புதிய பணிமனையைக் கட்டித் தருவாரா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் சார்பில் சுங்கம்–1 பணிமனையில் 107 பேருந்துகளும், சுங்கம்–2 பணிமனையில் 121 பேருந்துகளும் பராமரிக்கப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றன. ஒண்டிப்புதூர் பணிமனையில் 114 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பராமரிப்பு வசதியை மேம்படுத்த சுங்கம்–1, 2 ஆகிய இரண்டு பணிமனைகளையும் பிரித்து, மூன்றாவதாகப் புதிய பணிமனை ஒன்றைத் துவங்க மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு வருகின்றது. புதிய இடம் கிடைக்கப்பெற்ற பின்பு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

[2012 மே 14

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதியில் பல ஆண்டுகளாக அரசுப் பேருந்துகள் சாலையோரங்களில் நின்று கொண்டிருக்கின்றன. எனவே, எனது தொகுதிக்கு ஒரு பணிமனை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளை போக்குவரத்துக் கழக பணிமனைகளில் பராமரிக்கின்றபோது அங்கே நிறுத்திப் பராமரிப்பதற்கு போதிய இடவசதி இல்லாதபட்சத்தில், அந்தப் பேருந்துகளுக்கு புதிய பணிமனைகள் அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த ஒரே ஆண்டுக் காலத்தில் 2011–2012 ஆம் ஆண்டு 10 புதிய போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் அமைப்பதற்கும், 2012–2013 ஆம் ஆண்டு 36 புதிய போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் அமைப்பதற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 46 போக்குவரத்துக் கழக பணிமனைகள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதன்படி துறையின்சார்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று துறையின் சார்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரப் போக்குவரத்துக் கழகம் இயங்குகிற சென்னையில் மட்டும்தான் பஸ் நிலையங்களைப் போக்குவரத்துக் கழகமே உருவாக்கி பராமரிக்கிற ஏற்பாடு இருக்கிறது. பெரம்பூர் தொகுதிக்குள்ளே மகாகவி பாரதியார் நகரையொட்டி முல்லை நகரிலும், கவியரசு கண்ணதாசன் நகரிலும் இரண்டு பஸ் நிலையங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட அவை அரை பணிமனைகளைப்போல என்றுகூட சொல்லலாம். ஆனால், கடந்த 5 ஆண்டுகளிலே முழுக்க முழுக்க பராமரிப்பற்று, கவனிப்பில்லாமல் மேலே இருக்கிற ஷீட் உடைந்து, சுற்றுச் சுவர்கள் பழுதுபட்டு, புதர்

2012 மே 14]

மண்டி, மக்கள் உள்ளே சென்று கழிவறையாகப் பயன்படுத்துகிற அளவுக்கு மோசமாக இருக்கின்றன. ஆகவே, மேற்படி பஸ் நிலையங்கள் இரண்டையும் பராமரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக இயக்கப்படுகின்ற பேருந்துகளுக்குப் புதிய பணிமனைகள் அமைக்கப்பட வேண்டுமென்று 2012–2013 ஆம் ஆண்டு 4 புதிய போக்குவரத்துக் கழக பணிமனைகள் அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதேபோல, ஏற்கெனவே பழுதடைந்து பராமரிக்கப்படாமல் நிலுவையிலிருந்த போக்குவரத்துக் கழகத்தினுடைய பணிமனைகளையும், பேருந்து நிலையங்களையும் பராமரிப்பதற்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, துறையின் சார்பாக திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தப் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று பணிமனை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

ஹெலிகாப்டர் தளம்

***12882—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, கடலோரப் பகுதிகளில் மீனவர்களைப் பாதுகாக்க ஹெலிகாப்டர் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS